அ.வ.எண்.162/2015
நாள்.28/07/2021
<u>பெயர்- காளியண்ணன் த.பெ.பெரியகவுண்டர்</u>
<u>வாதி தரப்பு 2ம் சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்</u>
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி என்னை அழைத்து வந்தார். வாதி எனக்கு உறவினர். என் மாமியாருக்கு மாமன் மகன். எனக்கு நிலம் தாவா சொத்திற்கு அரை கி.மீ தூரத்தில் உள்ளது. ரங்கசாமி கவுண்டருக்கு எத்தனை மகன் என்றால் ஒரு மகன். ஒரே மகன் என்பதால் எதற்காக தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாது. தானமாக கொடுத்த சொத்திற்கு செக்குபந்தி போட்டுள்ளதா என்றால் தெற்கில் ஐவேஸ் ரோடு, கிழக்கில் ரங்கசாமி கவுண்டர் நிலம், மேற்கில் பழனியப்பகவுண்டர், வடக்கில் மேச்சல் புறம்போக்கு. மேற்கண்ட செக்குபந்திக்குள் கிணறு உள்ளதா என்றால் உள்ளது. அப்போது மின்மோட்டர் இல்லை. தற்போதும் மேற்கண்ட செக்குபந்திக்குள் கிணறு உள்ளது. வாதி யார் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பழனியப்பகவுண்டர். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதிக்கு கிணறு இல்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். பழைய சர்வே எண் தற்போதுதைய சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் பத்திரம் எழுதிகொடுத்துள்ளார் என்றால் 1980 ஆம் வருடம். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட செக்குபந்தியும் தாவா சொத்தில் உள்ள செக்குபந்திக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்றால் தெரியாது. பிரதிவாதிகளுக்கு 4 பக்க எல்லை குறிப்பிட்டு ரங்கசாமி சொத்து விற்பனை செய்தார் என்றால் தெரியாது. பழனியப்பகவுண்டர் நிலத்தில் ஒரு கிணறு உள்ளது என்றால் உள்ளது. அதில் பம்புசெட் மோட்டார் உள்ளதா என்றால் வாதி பிரதிவாதி இருதரப்பிலும் வைத்துள்ளார்கள். பழனியப்பகவுண்டர்க்கு தான் பம்புசெட் கிணறு உள்ளது என்றால் சபாபதி வைத்துள்ளார் நான் பாரத்துள்ளேன். கிணற்றுக்கு எந்தபுறம் சபாபதி மோட்டார் உள்ளது என்றால் 2 மோட்டார் உள்ளது. வாதிக்கு எந்த புறம் உள்ளது என்று தெரியாது. வாதி அதில் தண்ணீர் எடுக்கவில்லை என்றால் வழக்கு தாக்கல் செய்யும் வரை எடுத்து வந்தார் அதன்பின்பு தான் எடுக்கவில்லை. வாதி எந்த காலத்திலும் தண்ணீர் எடுத்து செல்லவில்லை என்றால் சரியல்ல. தண்ணீர் எப்படி எடுத்து சென்றார் என்றால் பைப் மூலம் எடுத்து சென்றார் தற்போது உள்ளதா என்றால் தெரியாது. நான் சொல்வது போல் பைப் இல்லை என்றாலும் பைப் மூலமாக தண்ணீர் எடுத்து செல்லவில்லை என்றாலும் சரியல்ல. மின் இணைப்பு எண் தெரியாது. ரங்கசாமிகவுண்டர் 1ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த சொத்தில் வாதி மோசடியாக செட்டில்மெண்ட் எழுதி பொய் பாத்தியம் கொண்டாடி வருகிறார் என்றால் சரியல்ல். தானபத்திரத்தில் கண்ட அளவுகளின் படி வாதி பட்டா வாங்கி உள்ளர் என்றால் வாங்கி உள்ளார். பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கிணற்றில் வாதிக்கு எந்த வித பாத்தியமும் இல்லை என்றாலும் அவருக்கு வீன்இடைஞ்சல் செய்ய வேண்டும் என்பதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.